நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1. சாத்தூர்

**முன்னிலை : செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,**

நீதித்துறை நடுவர் எண்.1. சாத்தூர்.

2026- ம் ஆண்டு மார்ச் மாதம் 06–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**சி.ஆர்.எம்.பி.எண்.137/2026**

in

C.r.No:59/2026

கவின்குமார், வயது 20/2026, (2 வது எதிரி)
த/பெ. மகேந்திரன் . .. மனுதாரர் / எதிரி

– எதிர் –

சார்பு ஆய்வாளர் அவர்கள்,
ஏழாயிரம்பண்ணை காவல் நிலையம்,
குற்ற எண்.59/2026
பிரிவுகள் 27(1) ARMS Act. .. எதிர்மனுதாரர் – குற்றமுறையீட்டாளர்.

இன்று (06.03.2026)–ம் தேதி இம்மனு விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. மாரிமுத்து, பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் எழுத்து மூலமான ஆட்சேபணையை பரிசீலனை செய்தும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>உத்தரவு</u>

1) மனுதாரர் பிரிவு 480 BNSS–ன் கீழ் பிணை கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர் அப்பாவி என்றும், சிறு பிள்ளை என்றும், விளையாட்டுத்தனமாக இத்தகைய தவறு செய்தார் என்றும், மனுதாரருக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றும், மனுதாரருக்கு நிலையான முகவரி உள்ளது. மனுதாரருக்கு பிணை வழங்குபட்சத்தில் பிணைக்குரிய ஜாமீன்தார்கள் வழங்கவும் இந்நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கவும் தயாகராக இருக்கிறார். எனவே மனுதாரருக்கு பிணை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

3) அரசுத் தரப்பில் 01.03.2026 ம் தேதி 13.15 மணிக்கு ஏழாயிரம்பண்ணை காவல் நிலைய சாப்பு ஆய்வாளர் திரு. ராஜா, சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் திரு. வைரமுத்து, திரு.

ஜோதிராஜ், தலைமைக் காவலர் 1357 திரு. செல்வராஜ் ஆகியோர்கள் சகிதம் நிலைய சரக பகுதியில் குற்றத்தடுப்பின் பொருட்டு ரோந்து செய்து சுற்றி கண்காணித்து வந்த போது ஏழாயிரம்பண்ணை சிவசங்குபட்டி விலக்கு அருகிலுள்ள தெப்பக்குளத்தின் அருகில் உள்ள பாலத்தில் இரண்டு நபர்கள் வீச்சருவாளை கையில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீஸ் பார்ட்டி சகிதம் தாங்கள் 13.30 மணிக்கு மேற்படி இடத்திற்கு சென்று பார்த்த போது மேற்படி நபர்கள் போலீஸ்பார்ட்டியாகிய தங்களைக் கண்டதும் அங்கிருந்து எழுந்து ஓட முயன்றவரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்தபோது பாலமுருகன், கவின்குமார் இருவரும் தனிமையில் உட்கார்ந்திருப்பதற்கான காரணத்தைக் கேட்டதற்கு சரியான காரணத்தைச் சொல்லாமல் முன்னுக்குப்பின் முரணான பதிலை சொன்னதால் அவர்கள் மீது சந்தேகம் கொண்டு போலீஸ் பார்ட்டியின் உதவியுடன் சோதனையிட்டபோது 1வது எதிரி முதுகுக்கு பினனால் ஒரு நீளமான வீச்சருவாளை சொருகி வைத்திருந்ததைக் கைப்பற்றி அவரை விசாரித்த போது அவர் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு ஏழாயிரம்பண்ணை பகுதியில் வீச்சருவாளை கையில் வைத்துக்கொண்டு எதிரிகள் இருவரும் வருவோர், போவோரை மிரட்டிக் கொண்டும், வீச்சருவாளை தீப்பறக்க உரசி பயமுறுத்தி திரிந்து வந்ததாகவும் அந்த வழியாக யார் வந்தாலும் அவர்களை அருவாளை காட்டி அவர்களிடம் இருக்கும் பணத்தை பிடுங்கி விட வேண்டுமென்ற நோக்கத்தில் உட்கார்ந்திருந்ததாகவும் சொன்னவரை பிடிக்காமல் விட்டால் வேறு ஏதாவது குற்றச்செயலை நடத்திவிடுவார்கள் என்பதால் போலீசார் உதவியுடன் இருவரையும் 13.45 மணிக்கு கைது செய்து 1வது எதிரியிடமிருந்த அரிவாளை 13.50 மணிக்கு கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் வெளி நபர்கள் யாரும் கையெழுத்திட முன்வராததால் தாங்களே அத்தாட்சியில் கையொப்பமிட்டு மேற்படி எதிரிகளையும், கைப்பற்றப்பட்ட வீச்சருவாளையும் 14.45 மணிக்கு நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்துள்ளார்.

4) எதிர்மனுதாரர் தன்னுடைய ஆட்சேபணையில், எதிரியை பிணையில் விடும்பட்சத்தில், மீண்டும் அதே குற்றத்தை செய்யக்கூடும் என்பதாலும், நீதமனற் விசாரணைக்கு சரியாக ஆஜராகமாட்டார் என்பதாலும், இவ்வழக்கின் எதிரியைப் பிணையில் விட கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

5) வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. கடந்த 01.03.2026ம் தேதி முதல் 06.03.2026ம் தேதி வரையிலான 06 நாட்கள் சிறையில் இருந்து வருகிறார். இவ்வழக்கில் 2ம் குற்றம்சாட்டப்பட்ட நபர் பொது இடத்தில் வீச்சவருவாள் என்ற ஆபத்தான ஆயுதத்தை கையில் வைத்துக் கொண்டு வருவோர் போவோரை மிரட்டிக்கொண்டும், வீச்சருவாளை தீப்பறக்க உரசி பயமுறுத்தி திரிந்து வந்ததாக அரசு தரப்பில் கூறப்பபட்டுள்ளது. இவ்வாறு ஆபத்தான ஆயுதமான வீச்சருவாளை கையில் ஏந்தி பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டதாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, 2ம் குற்றம்சாட்டப்பட்ட நபர் நீதிமன்ற காவலில் அனுப்பப்பட்டுள்ளார். இந்நிலையில் 2ம் குற்றம்சாட்டப்பட்ட நபர் பிணை கோரி மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் வாதங்களையும், வழக்கின் பதிவுகளையும், குற்றச்சாட்டின் தன்மையையும் இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலித்தது.

6) பொது இடங்களில் ஆயுதங்களுடன் திரண்டு பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வது சமூக அமைதிக்கும் சட்ட ஒழுங்கிற்கும் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது என்பது மறுக்க முடியாத உண்மை. இத்தகைய செயல் பொதுமக்களிடம் அச்ச உணர்வை உருவாக்கி, பொது அமைதியை குலைக்கும் தன்மை உடையதாகும். சமீப காலங்களில் ஆயுதங்களுடன் தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் அதிகரித்து வருவதை நீதிமன்றம் கவனத்தில் எடுத்துள்ளது. அதனால், ஆயுதங்களுடன் கூடிய இத்தகைய நடத்தை சமூகத்திற்கு கடுமையான அச்சுறுத்தலாக அமைவதனால் இத்தகைய செயல்களுக்கு நீதிமன்றம் கடுமையான எச்சரிக்கையையும் கண்டனத்தையும் பதிவு செய்கிறது.

7) மேலும், 2ம் குற்றம்சாட்டப்பட்டவர் இளம் வயதுடையவர் என்பது உண்மைதான். ஆனால் இளம் வயதிலேயே சட்டத்திற்கு புறம்பான இத்தகைய செயல்களில் ஈடுபடுவது மிகவும் வருத்தகரமானது. இளம் வயதில் ஒரு நபர் சமூக பொறுப்புடன் சட்டத்திற்கு மதிப்பளித்து நல்லொழுக்கத்துடன் வளரும் காலமாகும். மேலும், இந்நிலையில் 2ம் குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு பிணை வழங்கப்படும் பட்சத்தில் , பொதுமக்களின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் பாதிப்பு ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது என்பதையும் நீதிமன்றம் கருத்தில் கொண்டுள்ளது.

8) மேற்கண்ட அனைத்தையும் கருத்தில் கொண்டு, இந்நிலையில் 2ம்

குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு பிணை வழங்குவது பொருத்தமல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கு சூழ்நிலை மற்றும் சங்கதிகளையும் கருத்திற்கொண்டும் மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இறுதியாக, இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 06–ம் நாள் இவ்வுத்தரவு திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

நீதித்துறை நடுவர் எண்.1

சாத்தூர்.